*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*26 10 2025 SUNDAY   6.30 PM*

*வணக்கம் - மாநிலச் செய்திகள்*
*தலைப்புச் செய்திகள்*

1. ஆப்பரேஷன் சிந்தூரின் வெற்றி, நாட்டு மக்கள் அனைவருக்கும் பெருமிதம் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மழை வெள்ள பாதிப்புகளை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

3. டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் முறையாக செயல்படுவதை உறுதி செய்ய திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4. வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், தீவிரப் புயலாக வலுவடைந்து காக்கிநாடா அருகே நாளை மறுநாள் கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஆசிய இளையோர் விளையாட்டு போட்டிகளின் பளு தூக்கும் பிரிவில் இந்தியாவின் Preetismitha Bhoi தங்கப்பதக்கம் வென்றார்.

>>>>>>><<<<<<<

ஆப்பரேஷன் சிந்தூரின் வெற்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் பெருமிதம் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte – மோடி (1) 48 வினாடிகள்)*

சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த தினத்தையொட்டி வரும் 31-ஆம் தேதி நடைபெறவுள்ள ஒற்றுமை ஓட்டத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

*(Sound Byte – மோடி (2) 42 வினாடிகள்)*

வந்தேமாதரத்தின் 150-ஆவது ஆண்டுதின கொண்டாட்டம் அடுத்த மாதம் 7-ஆம் தேதி நடைபெறவுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

*(Sound Byte – மோடி (3) 43 வினாடிகள்)*

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>>>><<<<<<<

மழை வெள்ள பாதிப்புகளை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னை முதல் கன்னியாகுமரி வரை அனைத்து மாவட்டங்களிலும் இதற்கான பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நெல் கொள்முதல் நிலையங்கள் தடையின்றி செயல்படுவது உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் முறையாக செயல்படுவதை உறுதி செய்ய திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மகளிர் அணித் தலைவர் திருமதி. வானதி சீனிவாசன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக அரசின் இந்த நடவடிக்கைக்கு சட்டப்பேரவை தேர்தலில் விவசாயிகள் உரிய பதிலளிப்பார்கள் என்று குறிப்பிட்டார்.

பிஎம் ஶ்ரீ திட்டத்தில் கேரளா இணைந்தது போல், தமிழகமும் இணைய வேண்டும் என்றும் திருமதி. வானதி சீனிவாசன் கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<<

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், தீவிரப் புயலாக வலுவடைந்து +ஆந்திராவின் காக்கிநாடா அருகே நாளை மறுநாள் கரையை கடக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரை (1) 41 செகண்ட்ஸ்)

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட 11 மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரை (2) 46 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

மாவட்டச் செய்திகள்

திருவாரூர் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமையான இன்றும் செயல்பட்டு வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை ஆட்சியர் திரு. மோகனச்சந்திரன் ஆய்வு செய்தார்.

>>>>>>><<<<<<<

செங்கல்பட்டு மாவட்டத்தின் பெரிய ஏரியான மதுராந்தகம் ஏரியில் மூன்று ஆண்டுகளாக நடைபெற்ற பராமரிப்புப் பணிகளுக்குப் பின்னர் இன்றுமுதல் தண்ணீரை தேக்க பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

>>>>>>><<<<<<<

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஏரியிலிருந்து கொசஸ்தலை ஆற்றில் திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு தற்போது 5 ஆயிரத்து 500 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

தென்காசி மாவட்டம், குற்றாலம் பிரதான அருவியில் 10 நாட்களுக்குப் பிறகு சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

நாகை மாவட்டம், சிக்கல் சிங்காரவேலர் ஆலயத்தில் கந்தசஷ்டி திருவிழாவை ஒட்டி, இன்று நடைபெற்ற தேரோட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

>>>>>>><<<<<<<

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஊராட்சிகளில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி கிராமசபைக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய இளையோர் விளையாட்டு போட்டிகளின் பளு தூக்கும் பிரிவில் இந்தியாவின் Preetismitha Bhoi தங்கப்பதக்கம் வென்றார்.

பஹ்ரைனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 44 கிலோ எடைபிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இதன் மற்றொரு பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும் அவர் வென்றார்.

>>>>>>><<<<<<<

ஆசிய இளையோர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

சீனாவின் Chengdu-வில் நடைபெற்ற இப்போட்டியின் 17 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் Diksha Sudhakar தங்கப்பதக்கத்தையும், Lakshya Rajesh வெள்ளி பதக்கத்தையும் வென்றனர்.

15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் Shaina Manimuthu தங்கப்பதக்கம் வென்றார்.

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் Jagsher Singh Kangurra-வும், கலப்பு இரட்டையர் பிரிவில் Jangjeet Singh Kajla – Jananika Ramesh இணையும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

>>>>>>><<<<<<<